*கவனிக்க.-20201.11.19 ஆந் திகதிய 2255 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2256 - 2021 නොවැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2021.11.26**

*2256ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 326 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, திசெம்பர் மாதம் 17ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 03ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

325 - B 082291 - 353 (2021/11)

# நானாவித அறிவித்தல்கள்

## கணக்குகளைத் தீர்த்து கலைத்துவிடல்
## கொழும்பில் இயங்கும் மேல் மாகாண சிவில் வர்த்தக மேல் நீதிமன்றம்

ரன்ன,வெல்லோடே, ரகவ வீதியில் டாவின்ஸ் பீச் ரிஸோர்ட்ஸ் ( தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனி சம்பந்தமான விடயம் குறித்தாவது

வழக்கு இல. : HCC/ 76/ 2021/ CO
தன்மை: கணக்குகளைத் தீர்த்துக் கலைத்து விடல்
நடைமுறை : சுருக்கம்
பெறுமதி: ரூபா 350000000.00

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பிரிவு XII இன் கீழ் மற்றும் நீதிமன்றத்தால் கலைப்பது சம்பந்தமாக

(கம்பனி பதிவு இலக்கம் பீவீ 12956)

1.தனதுஅற்றோணிதாரரான மாத்தறை, புகுல் வல்ல, கிரிந்த, முஸ்லிம் பள்ளி வீதி, கட்டாடிகே வத்தை, இல. 3/23C இல் வசிக்கும் மஹமட் ரஸீக் பஸ்லி மகமட் அல்லது மொஹமட் ரஸீன் பஸ்லி மொஹமட் மூலம் தெரிபடும் ஜேர்மனி க்லாட்பச் பர்கீஷ் 51429, 11ஸூம் கரியுஸ் புஷ் இல் வசிக்கும் ரன்பட் ரூபட் அல்லது ரன்பட் ஹான்ஸ் ரூபட்,

2.தனதுஅற்றோணிதாரரான மாத்தறை, புகுல் வல்ல, கிரிந்த, முஸ்லிம் பள்ளி வீதி, கட்டாடிகே வத்தை, இல. 3/23C இல் வசிக்கும் மஹமட் ரஸீக் பஸ்லி மகமட் அல்லது மஹமட் ரஸீக் பஸ்லி மஹமட் மூலம் தெரிபடும் ஜேர்மனி க்லாட்பச் பர்கீஷ் 51429, 11ஸூம் கரியுஸ் புஷ் இல் வசிக்கும் ரன்பட் ரூபட் அல்லது ரன்பட் ஹான்ஸ் ரூபட் என்னும் தனது பிரதிநிதி மூலம் தெரியப்படும் உல்ரிச் ஹாபடின் உரிமையாளராகிய ரய்னர் ரூபி.

முறையீட்டாளர்கள்

சிவில் நீதிமன்ற நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கொழும்பில் செயற்படுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றம் மூலம் மேலே பெயர் குறித்த கம்பனியை கணக்குகளைத் தீர்த்துக் கலைத்து விடுவதன் நிமித்தம் தனது அற்றோணிதாரரான மாத்தறை, புகுல்வல்ல, கிரிந்த, முஸ்லீம பள்ளி வீதி, கட்டாடிகே வத்த, இலக்கம் 3/ 23C இல் வசிக்கும் மஹமட் ரஸீக் பஸ்லி மகமட் அல்லது மொஹமட் ரஸீன் பஸ்லி மொஹமட் மூலம் தெரிபடும் ஜேர்மனி க்லாட்பச் பர்கீஷ் 51429, 11 ஸூம் கரியுஸ் புஷ் இல் வசிக்கும் ரன்பட்,ரூபட் அல்லது ரன்பட் ஹான்ஸ் ரூபட்டும் தனது அற்றோணி தாரரான மாத்தறை, புகுல்வல்ல, கிரின்த, முஸ்லிம் பள்ளி வீதி, கட்டாடிகே வத்த, இலக்கம் 2/23C இல் வசிக்கும் மஹமட் ரஸிக் பஸ்லி மகமட் அல்லது மொஹமட் ரஸின் பஸ்லி மொஹமட் மூலம் தெரியப்படும் ஜேர்மன் இல் க்லாட்பச், பர்கிஷ் , 51429, 11, ஸூம் கரியுஸ்புஷ் இல் வசிக்கும் ரன்பட் ரூபட் அல்லது ரன்பட் ஹான்ஸ் ரூபட் என்னும் தனது பிரதிநிதி மூலம் தெரிபடும் உல்ரிச் ஹாபட் இன் உரிமையாளரான ரய்னர் ரூபி என்னும் அக் கம்பனியின் பங்குதாரர்களான முறைப்பாட்டாளர்களினால் 2021.10.08ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும் அந்த முறைப்பாடு 2022.02.02 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்பதையும் அந்த முறைப்பாடு சம்பந்தமாக நீதிமன்றம் கட்டளை பிறப்பிப்பது சம்பந்தமாக சார்பாகவோ எதிராகவோ கருத்துத் தெரிவிப்பதற்கு எண்ணுகின்ற அந்தக் கம்பனியின் எவரேனும் கடன் கொடுப்பாளர் மற்றும் பிரதிநிதித்துவம் கொண்டவர் தத்தமது கருத்துத் தொடர்பாக அந்த விசாரணை நடைபெறும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையிலோ பதிவு செய்து கொண்ட சட்டத்தரணி ஒருவர் மூலமாக தோன்றி கருத்துத் தெரிவிக்க முடியுமென்பதையும் முறைப்பாட்டின் பிரதியை குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் குறிப்பிட்ட கடன் கொடுப்பாளரால் மற்றும் பிரதிநிதித்துவம் கொண்டவரால் கீழ் ஒப்பமிடும் சட்டத்தரணியிடம் கேட்கும் பட்சத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

எம்.எச்.எம்.ஸகி,
சட்டத்தரணி.

100A, பீரிஸ் வீதி, கல்கிஸ்ஸை.

**குறிப்பு**:சொல்லப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாக விசாரணையின் போது தெரிபடுவதற்கு எண்ணங் கொண்ட எவரும் அவ்வாறு தெரிபடுத்துவதற்கான கருத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்தரணி எம். எச். எம். ஸகி அவர்களுக்கு எழுத்து மூலம் அறியக் கொடுத்தல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அறிவித்தல் கொடுப்பவரின் பெயரும் முகவரியும் கொண்ட தகவல் கொடுக்கப்படுவதோடு அந்த நபரோ கம்பனியாயின் கம்பனியோ அல்லது அந்த நபரின் அல்லது அவர்களின் சட்டத்தரணியோ கையொப்பமிடுவதோடு 2021.12.10 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது தபால் மூலம் அனுப்புவதாயின் போதுமான காலத்திற்குள் மேற்குறிப்பிட்ட பெயர் கொண்ட சட்டத்தரணிக்கு கிடைக்கக் கூடியதாக தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

11- 816

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.